**DEPOSITION OF WITNESS**

(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)

IN THE COURT OF MAGALIR NEETHIMANDRAM,(MAHILA COURT),COIMBATORE

S.C.No. 109 of 2019

| | | | |
|---|---|---|---|
| Name of Witness | PW-21 டாக்டர்.கணபதி | Caste | |
| Father / Husband Name | | Calling | |
| Village | | Religion | |
| Cell | | Age | |

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 19.09.2022

**முதல் விசாரணை-**

நான் தற்போது தேனி அரசு மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் உதவி பேராசிரியராக பணிபுரிந்து வருகிறேன். கடந்த 26.01.2019 அன்று கோயமுத்தூர் அரசு மருத்துவக்கல்லூரி சட்டம் சார்ந்த மருத்துவத்துறையில் போதகராக பணிபுரிந்தபோது பீளமேடு காவல் நிலைய குற்ற எண் 127/2019 தொடர்புடைய சுமார் 60 வயது மதிக்கத்தக்க செல்வி என்ற பெண் பிரேதத்தை சடலக்கூறு ஆய்வு செய்ய வேண்டி காவல் ஆய்வாளர் அவர்களின் வேண்டுகோள் கடிதம் நண்பகல் 12.00 மணியளவில் பெறப்பட்டு பிரேதமானது பெண் தலைமைக்காவலர் எண் 2199 திருமதி.சத்யபாமா அவர்களால் அடையாளம் காண்பிக்கப்பட்டு, பிற்பகல் 12.05 மணியளவில் சடலக்கூறு ஆய்வு ஆரம்பிக்கப்பட்டது. மரண விரைப்புத்தன்மையானது உடலின் மேற்புறத்தில் காணப்பட்டது. பிரேதமானது மிதமான போஷாக்குடன் காணப்பட்டது. கை மற்றும் கால் விரல் நகங்கள் நீல நிறத்தில் காணப்பட்டன. பிரேதத்தின் மீது சிகப்பு, காபி மற்றும் ஒயிட் நிறத்திலான பூ டிசைன் போட்ட சேலை, சிவப்பு நிற பிளவுஸ், வெளிறிய பச்சைநிற பாவாடை காணப்பட்டது. இரண்டு கண்களிலும் ரத்தம் கன்றி காணப்பட்டது. உடலில் காணப்பட்ட இறப்புக்கு முன் ஏற்பட்ட காயங்கள் பின்வருமாறு. காயம் 1 - சிவப்பு நிற கன்றிய காயங்கள், 5x3x1 செ.மீ ஆழம் அளவில் வலது தோள்பட்டையின் மேல்பகுதியிலும், 12x11x1 செ.மீ ஆழத்தில் இடது கன்னத்தின் முழுவதிலும், 2x1x0.5 செ.மீ ஆழத்தில் கீழ்உதட்டின் வலது புறத்திலும், 1.5x0.5x0.5 செ.மீ ஆழத்தில் மேல்உதட்டின் வலது புறத்திலும், 3x2x0.5 செ.மீ ஆழத்தில் வலது பக்க கன்னத்திலும்,

3x2x0.5 செ.மீ ஆழத்தில் கீழ்தாடையின் இடது பக்கத்திலும், 2x1x0.5 செ.மீ ஆழத்தில் வலது கன்னத்தின் கீழ்பகுதியிலும், 4x3x1 செ.மீ ஆழத்தில் வலது கன்னத்தின் மேல்பகுதியிலும், 11x5x0.5 செ.மீ ஆழத்தில் கழுத்தின் இடது பக்கத்திலும் காணப்பட்டன. காயம் 2 – நீள்வட்ட வடிவ சிவப்பு நிற கன்றிய காயம் 2x1.5x0.5 செ.மீ ஆழத்தில் கழுத்தின் வலது பக்கத்தில் குரல்வளை எலும்பிலிருந்து 1 செ.மீ வலது பக்கத்தில் காணப்பட்டது. காயம் 3 – பிறை வடிவ சிராய்ப்புக்காயங்கள் 0.5x0.25 செ.மீ அளவில் கழுத்தின் வலது பகுதி, குரல்வளையின் கீழ்பகுதி அளவில், 0.5x0.25 செ.மீ அளவிலான மூன்று பிறைவடிவ சிராய்ப்பு காயங்கள் கழுத்தின் இடது பக்கத்திலும், 0.5x0.25 செ.மீ அளவில் வலது கன்னத்திலும் காணப்பட்டன. கபாலத்தை அறுத்து கூராய்வு செய்தபோது 6x5 செ.மீ அளவிலான சிவப்பு நிற கன்றிய காயம் தலையின் பின்பகுதி தோலின் அடியில் காணப்பட்டது. மற்றுமொரு சிவப்பு நிற கன்றிய காயம் 7x5 செ.மீ அளவில் இடதுபக்க தலையின் முன் மற்றும் பக்கவாட்டு தோலின் அடியில் காணப்பட்டது. இடது தலையின் பக்கவாட்டில் சதையில் கன்றிய காயம் காணப்பட்டது. மூளை முழுவதும் மூளை அடிச்சவ்வின் அடியில் ரத்தக்கசிவு காணப்பட்டது. கழுத்தை அறுத்து பரிசோதனை செய்ததில் சிவப்பு நிற கன்றிய காயம் 3x1.5x1 செ.மீ அளவில் வலதுபக்க கழுத்தில் மேல்பகுதியில் உள்ள தசைகளில் காணப்பட்டது. அந்த கன்றிய காயமானது குரல்வளையில் எலும்பின் நேராக காணப்பட்டது. சிவப்பு நிற கன்றிய காயம் 9x6x1 செ.மீ அளவில் இடது பக்க கழுத்தின் தசைகளிலும், 8x4x0.5 செ.மீ அளவிலான கன்றிய காயங்கள் வலது காரை எலும்பு பகுதியிலும், 4x3x0.5 செ.மீ அளவிலான கன்றிய காயமானது குரல்வளையின் பின்பகுதியில் காணப்பட்ட தசைகளில் காணப்பட்டது. குரல்வளையின் இடதுமேல்பகுதி உடைந்தும், அதனைச்சுற்றி ரத்தம் கன்றியும் காணப்பட்டது. பிற உள்ளுறுப்பு பரிசோதனையில் வயிற்றறை மற்றும் மார்பறை காலியாக இருந்தது. நாவடி எலும்பு நல்ல நிலையில் இருந்தது. இதய அறையில் குறைந்த அளவான இரத்தம் காணப்பட்டது. அதனுடைய தமனிகள் எவ்வித அடைப்பும் இன்றி காணப்பட்டன. இரைப்பையில் சுமார் 300 கிராம் அளவிலான சமைத்த அரிசி உணவுப்பொருள் எவ்வித நெடியுமின்றி காணப்பட்டது. அதனுடைய சிலேட்டும படலம் ரத்தம் கன்றி காணப்பட்டது. சிறுகுடலில் சுமார் 10 மி.லி அளவிலான பித்தம்

கலந்த திரவம் எந்தவித நெடியுமின்றி காணப்பட்டது. அதனுடைய சிலேட்டும படலம் ரத்தம் கன்றி காணப்பட்டது. மூளை, கல்லீரல், மண்ணீரல், நுரையீரல்கள் மற்றும் சிறுநீரகங்கள் சாதாரணமாகவும், அதனுடைய வெட்டுதோற்றங்கள் ரத்தம் கன்றியும் காணப்பட்டன. சிறுநீரகப்பை காலியாக இருந்தது. கர்ப்பப்பை சாதாரணமாகவும், அதனுடைய வெட்டுத்தோற்றம் காலியாகவும் இருந்தது. உள்ளுறுப்புகள் சேகரிக்கப்பட்டு இரசாயன பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. இரத்த மாதிரி சேகரிக்கப்பட்டு உயிரியல் பரிசோதனைக்காக அனுப்பப்பட்டது. சடலக்கூறு கருத்துரையில் இறந்த நபர் அவரது கழுத்தை பலமாக அழுத்தியதால் உண்டான மூச்சுத்திணறலால் இறந்திருக்கலாம் என்றும், மற்றும் வாய் மற்றும் நாசித்துவாரத்தை மூடியதால் உண்டான மூச்சுத்திணறலால் இறந்திருக்கலாம் என்றும் சடலக்கூறு ஆய்வறிக்கையில் தெரிவித்துள்ளேன். நான் தயாரித்த சடலக்கூறு ஆய்வறிக்கை **அ.சா.ஆ.14**. விஸ்ரா ரிப்போர்ட் அறிக்கை **அ.சா.ஆ.15**. இரசாயன பரிசோதனை அறிக்கை பெற்று இறுதி அறிக்கையில் உடல் உள்ளுறுப்புகளில் எவ்வித விஷமும் இல்லை என்று இறுதி கருத்துரை வழங்கினேன். நான் வழங்கிய இறுதி கருத்துரை **அ.சா.ஆ.16.**

**குறுக்கு விசாரணை -**

என்னுடைய சடலக்கூறு ஆய்வு அறிக்கையில் சடலத்தினுடைய முகம் cyanosed என்ற வார்த்தை குறிப்பிடப்படவில்லை என்றால் சரிதான். cyanosed என்பதன் பொருள் சடலம் நீல நிறமாக மாறிவிட்டது என்று அர்த்தம். பொதுவாக throattling என்று ஏற்பட்டால் cyanosed வரும் என்றால் எல்லா கேஷிலும் வர வேண்டிய அவசியம் இல்லை. cyanosed என்பது மரணத்துக்கான போராட்டத்தில் மூச்சுத் திணறல் வெகுநேரம் எடுத்துக்கொண்டால் இந்த cyanosed symptom வரும். அ.சா.ஆ.14 ல் cyanosed என்ற வார்த்தை குறிப்பிடப்படவில்லை என்றால் கை, கால் நகங்கள் நீல நிறமாக இருந்தது என்று நான் குறிப்பிட்டுள்ளேன். throattling என்று வரும்போது பொதுவாக நாக்கு வெளியே தள்ளும் என்றால் எல்லா கேஷிலும் வெளியே வர வேண்டும் என்ற சூழ்நிலை இருக்காது. நான் சடலக்கூறு ஆய்வு செய்த செல்வி என்ற சடலக்கூறில் நாக்கு வெளியே தள்ளப்படவில்லை என்றால் சரிதான். இதுபோன்ற throattling case ல் காது, மூக்கு என்ற துவாரங்களில்

இரத்த கசிவு இருக்கும் என்றால் எல்லா நபருக்கும் வர வேண்டிய அவசியம் இல்லை. பொதுவாக throattling வழக்கில் அழுத்தமாக கையினால் அழுத்தம் கொடுக்கும்பொழுது கை விரல்கள் பதியும் என்றால் என்னுடைய சடலக்கூறு ஆய்வு அறிக்கையில் நீள்வட்டமான காயம் என்று குறிப்பிட்டுள்ளது கைவிரலின் அழுத்தம்தான். அந்த நீள்வட்ட காயமே ஒரு யூகத்தின் அடிப்படையில் சொல்கிறேன் என்று சொன்னால் சரியல்ல. மூச்சுத்திணறலால் மரணம் ஏற்படும் போது முகம் வீங்கி காணப்படும் என்றால் சரியல்ல, வீங்காது. throattling வழக்குகளில் கண்களில் ரத்தப்புள்ளிகள் வரும் என்றால் அ.சா.ஆ.14 சடலக்கூறு ஆய்வு அறிக்கையில் இரண்டு கண்களிலும் ரத்தம் செறிந்து சிவந்திருந்ததை குறிப்பிட்டிருக்கிறேன். அ.சா.ஆ.14 சடலக்கூறு ஆய்வு அறிக்கையில் கண்களைக் குறித்து குறிப்பிடுகையில் sub conjunctival hemorrhage என்று குறிப்பிட்டிருக்கிறேன். petechial hemorrhage இல்லை என்பதும் இது sub conjunctival hemorrhage ல் தான் வருகிறது என்றும் குறிப்பிட்டிருக்கிறேன். கண்பாவை என்பது இருக்கின்ற அளவைக் காட்டிலும் கூடுதலாக டைலைட் ஆகிவிட்டது என்று நான் குறிப்பிட்டிருக்கிறேனா என்றால் குறிப்பிடவில்லை, இறந்த நபர்கள் எல்லோருக்கும் கண்பாவையானது விரிந்துதான் காணப்படும். smothering என்று வாயைப்பொத்துவது என்றால் நாசித்துவாரமும் மூடப்பட்டது என்பதை நான் முதல் விசாரணையில் சொல்லியிருக்கிறேன். smothering செய்யும்போது உள்ளங்கையில் அச்சு பதியப்பட்டுள்ளது என்பதை நான் குறிப்பிட்டுள்ளேனா என்றால் இல்லை, உள்ளங்கையின் அச்சு வராது, அழுத்தத்தின் காரணமாக கன்றிய காயமாகத்தான் இருக்கும். உள்ளங்கையின் அச்சு வரும் என்று medical Jurisprudence மோடி சொல்லியிருக்கிறார் என்றால் அது எல்லாவற்றிற்கும் வராது. வாயில் துணி வைத்து மரணம் சம்பவித்தால் வாயில் அந்த துணிகளின் இழைகள் இருக்கும் என்றால் செல்வியின் வழக்கில் நான் எந்த நூல் இழையும் நான் பார்க்கவில்லை. smothering அழுத்தம் கொடுக்கும்போது உதட்டின் உள்பகுதியில் கிழிந்த காயங்கள் ஏற்பட வாய்ப்பு இருக்கிறது என்றால் எல்லா வழக்குகளிலும் அழுத்தத்தைப் பொறுத்து மாறும். இறந்த நபரினுடைய எதிர்ப்புத்தன்மை மற்றும் குற்றவாளியின் பலத்தைப் பொறுத்துத்தான் அதை நிர்ணயம் செய்யும். அ.சா.ஆ.14 ல் நான் குறிப்பிடப்பட்டுள்ள Antimoterm injury ல்

குறிப்பிட்டுள்ள காயங்கள் அனைத்தும் ஒரே நேரத்தில் ஏற்பட வாய்ப்பு இல்லை என்றால் சரிதான். கழுத்தில் யாராவது துணியை வைத்து இறுக்கினால் அந்த துணியினுடைய அழுத்தம் ligature mark வரும் என்றால் வரும். அ.சா.ஆ.14 சடலக்கூறு ஆய்வு அறிக்கையில் ligature mark உடலில் எந்த இடத்திலும் பார்த்ததாக குறிப்பு இல்லை என்றால் சரிதான். மரணத்தருவாயில் ஒரு போராட்டம் நடக்கும்போது இறக்கக்கூடிய நபர் கண்டிப்பாக அவர் எதிர்ப்பார் என்றால் தாக்கப்படும் நபர், தாக்கிய நபர் இவர்களுடைய பலத்தைப் பொறுத்துத்தான். எந்த உயிரியாக இருந்தாலும் தன்னுடைய உயிரை பாதுகாத்துக்கொள்ள போராட்டம் நடத்தும் என்றால் தாக்கப்படும் நபர், தாக்கிய நபர் இவர்களுடைய பலத்தைப் பொறுத்து அமையும். இறந்த பெண்மணியின் கை முட்டிகளிலோ, கால்களிலோ, பின்பகுதியிலோ காயங்கள் ஏதாவது காணப்பட்டதா என்றால் அந்தமாதிரியான காயங்கள் காணப்படவில்லை. பொதுவாக throattling ஏற்படும் போது மார்புக்கூட்டில் எலும்புமுறிவு ஏற்படும் என்றால் வாய்ப்பில்லை, மாறாக மார்பு மேல் அமர்ந்து அழுத்தினால் வாய்ப்பு உண்டு. இந்த வழக்கில் விலா எலும்பு முறிவு என்பது எதுவும் இல்லை.